மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 18/2021

பெயர் – சுந்தரராஜன் (வா.சா.1)

நாள் – 01.09.2023

பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

தபசில் சொத்துக்கான சர்வே எண் மற்றும் விஸ்தீர்ணம் என்ன என்றால் சர்வே எண்.396/1 புது சர்வேஎண்.393/3 ஆகும். விஸ்தீரணம் கிழமேல் 97 அடி பாதை தென்வடல் அளவு தெரியாது. அந்த இடத்திற்கான மொத்த பரப்பு எவ்வளவு என்றால் தெரியாது. பிரதிவாதியின் வீடு அமைந்துள்ள சர்வேஎண் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் வீடு அமைந்த இடத்திற்கான விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியாது. பிராதுடன் தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடத்தில் அ மற்றும் ஆ அயிட்ட சொத்துக்களை தனி தனியாக காண்பித்துள்ளேனா என்றால் காண்பிக்கவில்லை. உத்தேச வரைபடத்தில் அ மற்றும் ஆ அயிட்ட சொத்துக்களுக்கான தென்வடல் அளவை காண்பித்துள்ளேனா என்றால் தென்வடல் அடி 12 அடி என்று சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள உத்தேச வரைபடத்தில் நான்கு பக்க அளவுகளை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். அ அயிட்ட சொத்தில் எத்தனை வீடுகள் உள்ளன என்றால் காரை வீடு மற்றும் இரண்டு ஓட்டு வீடுகள் உள்ளன. காரை வீடு பின் பக்கத்திலும், முன்பக்கத்தில் இரண்டு ஓட்டு வீடுகள் சேர்ந்தார் போல் இருக்கும். முதலில் எந்த வீடு கட்டப்பட்டது என்றால் 1995ம் ஆண்டு ஓட்டு வீடு கட்டப்பட்டது. காரை வீட்டில் இருந்து ஓட்டு வீடிற்கு சென்று தான் கிழமேல் தெருவிற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். என் ஓட்டு வீடுகள் எந்த பக்கத்தை நோக்கி உள்ளது என்றால் கிழக்கு நோக்கி உள்ளது. தென்வடல் பாதைக்கு மேற்கு புறத்தில் என் வீடு உள்ளது. அடுத்து இரண்டு ஓட்டு வீடுகள் உள்ளன. என் வீட்டிற்கு முன்பாக தென்வடல் தெரு செல்கிறது என்றால் சரிதான். அந்த பாதையை பயன்படுத்தி தான் நாங்கள் வீட்டிற்கு வெளியே சென்று வருகிறோம் என்றால் சரியல்ல. கிழமேல் பாதை போய் தென்வடல் பாதை போய் மெயின் பாதைக்கு போவோம். நான் வழக்கிற்காக பாதை பொறுத்து மேற்படி விதமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு தெற்கு புறத்தில் பிரதிவாதிக்கு இடம் உள்ளது என்றால் உள்ளது. அதில் பிரதிவாதிகள் இரண்டு வீடுகள் கட்டியுள்ளார்கள்

என்றால் சரிதான். அந்த இடத்திற்குள் போர்வெல், கிட்சன், பாத்ரூம், மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்துள்ளார்கள் என்றால் கிழமேல் பாதையில் ஷெட் அமைத்து பாதையை மறைப்பதற்காக கற்களை குவித்து வைத்துள்ளார்கள். பிரதிவாதியின் இடத்திற்கான விஸ்தீர்ணம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் வீட்டிற்கு தெற்கு புறத்தில் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பொதுவான பொலி உள்ளது என்றால் சரியல்ல. தென்வடல் பாதை உள்ளது. என் இடத்திற்கும் வீட்டிற்கும் மேற்கு புறத்தில் ஒரே நேர்கோட்டில் தான் பிரதிவாதிகளின் இடத்திற்கான எல்லை முடிவடைகிறது என்றால் அது பொதுப்பாதை ஆகும். என் வீட்டிற்கு மேற்கு புறத்தில் தென்வடல் பாதை உள்ளது. என் வீட்டிற்கு மேற்கு புறம், கிழக்கு புறம் மற்றும் தெற்கு புறத்தில் பாதை உள்ளது என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் என் வீட்டிற்கு தெற்குபுறத்தில் எந்த பாதையும் இல்லை என்றால் சரியல்ல. பாதை உள்ளது. பொதுவாக ஒரு இடத்திற்கு மூன்றுபுறமும் பாதை செல்லாது என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு வடக்கு புறத்தில் யாருடைய இடம் உள்ளது என்றால் சொக்கரின் வீடு உள்ளது. என் வீட்டிற்கு தெற்கு புறத்தில் கிழமேல் பாதை செல்வதாக நான் சொல்லியுள்ள நிலையில் பிரதிவாதிகளின் வீட்டிற்கு முன்பு 3 அடி அளவில் தளகற்கள் பதித்து பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். அது பொதுப்பாதை ஆகும். பொதுப்பாதையில் சிமெண்ட் ரோடு என் வீட்டு சுவர் வரை பிரதிவாதிகள் தங்களது வீடு முன்பு இருந்து அமைத்திருந்தார்கள். அதில் சாணி தெழித்ததாலும் அப்படித்தான் தெழிப்போம் என்று சொன்னதாலும் பாதையை ஆக்கிரமிப்பு செய்திருந்ததால் அந்த சிமெண்ட் ரோட்டை நான் உடைத்தேன். பிரதிவாதிகள் வீட்டு முன்பு பிரச்சினைக்குரிய இடத்தில் 4 அடி நீளத்தில் தகரஷெட் அமைத்து பயன்படுத்தினார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அமைத்தார்கள். கிழமேல் பாதைக்கு தென்புறத்தில் கனகலட்சுமியின் இடம் உள்ளது என்றால் சரிதான். கனகலட்சுமியின் இடத்திற்கு கிழக்கு புறத்தில் தென்வடல் பாதை செல்கிறது என்றால் சரிதான். அதில் கனகலட்சுமி வீடு கட்டியுள்ளாரா என்றால் வீடு கட்டி தற்போது இடிந்து போய் உள்ளது. அது கூரை வீடு ஆகும். கம்பு சோளத்தட்டை வைத்து கூரை வைத்த வீடு ஆகும். அவரது வீட்டு வாசல் கிழக்கு புறம் பார்த்து இருந்தது. கனகலட்சுமியின் இடத்திற்கு பின்புறம் மேற்கு புறத்தில் பிரதிவாதிகளின் இடம் மற்றும்

வீடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் இடமும், கனகலட்சுமியின் இடமும் ஒட்டியேதான் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வீடு, வாசல் வடக்கு புறம் நோக்கி உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் பிரச்சனைக்குரிய 12 அடி கிழமேல் பாதை வழியாக வந்து என் வீட்டிற்கு முன்பு செல்லும் தென்வடல் பாதை வழியாக போய் வருவார்கள் என்றால் சரிதான். கிழமேல் 12 அடி பாதை போவதாக நான் சொல்லியுள்ளதிற்கிணங்க அந்த பாதையை பொதுப்பாதையாக கனகலட்சுமியோ ஊரில் உள்ள மற்ற நபர்களோ கேட்கவில்லை என்றால் கேட்டார்கள். ஊர் பொதுமக்களோ, கனகலட்சுமியோ பொதுப்பாதையாக கேட்டு அரசு அலுவலகத்தில் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் நான் மட்டும் தான் கொடுத்துள்ளேன். சர்வே எண்.393/3 ஆன பட்டா எனது தம்பி நடராஜன் மற்றும் எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது தம்பி வேறு ஒருவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார். எனது தம்பி வேறு ஒருவருக்கு கிரையம் கொடுத்துவிட்டதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லும் எனது தம்பியின் சொத்தான தபசில் அ அயிட்ட சொத்தை கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு சொத்துக்கு நானும், எனது தம்பியும் கூட்டு உரிமையாளர்கள் என்பதால் எனது தம்பி நடராஜனை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கமால் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு அவசியதரப்பினரை கட்சி சேர்காத தோஷத்திற்கு ஆட்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தம்பி அந்த சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார். 12 அடி கிழமேல் பாதை உள்பட பிரதிவாதிகள் 10.5 சென்ட் நிலத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தங்கள் வீட்டிற்கு வெளியே சென்று வருவதற்காகத்தான் கிழமேல் பாதையை அமைததுள்ளார்கள் என்றால் சரியல்ல. அது பொதுப்பாதை ஆகும். கிழமேல் 12 அடி பொதுப்பாதை என நான் சொல்வதற்கிணங்க அதற்கான வருவாய் துறை ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் வீட்டு எவ்வளவு காலம் ஆகிறது என்றால் 2004 ம் ஆண்டு இருக்கும். 2004 ம் ஆண்டு வீடு கட்டப்பட்டது என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் வீட்டிற்கு கிழக்கு புறம் தென்வடல் பாதையை தான் நான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் கிழமேல் பாதை

வழியாக போய் தென்வடல் பாதை வழியாகத்தான் பொதுப்பாதைக்கு செல்வேன். என் வீட்டு வாசல் வந்து தென்வடல் பாதை வழியாக தெற்கே சென்று மீண்டும் கிழமேல் பாதை வழியாக மேற்கு புறம் சென்று அதற்கு பிறகு மீண்டும் தென்வடல் பாதைவழியாக சென்று வடக்கே சென்று வருகிறேன் என்றால் சரிதான். எனது வீட்டின் மூன்று பக்கம் சுற்றி நான் போகிறேன் என்றால் சரிதான். என் வீட்டிற்கு முன்பு உள்ள தென்வடல் பாதையை நான் பயன்படுத்தி வடக்குபுறமாக செல்லவில்லை என்றால் செல்கிறோம். என் வீட்டிற்கு முன்பு உள்ள தென்வடல் ரோடானது சிமெண்டால் கட்டப்பட்டது என்றால் சரிதான். கிழமேல் 12 அடி பாதையான நான் சொல்லும் பாதை மண் ரோடு என்றால் சரிதான். என் வீட்டிற்கு பின்புறத்தில் உள்ள தென்வடல் பாதையும் மண் ரோடு என்றால் சரிதான். நான் வழக்கிற்காக சிமெண்ட் ரோடு வழியாக செல்லாமல் மண் ரோடு வழியாக சென்று வருகிறேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு தென்புறத்தில் உள்ள ஜன்னல் எப்போது வைக்கப்பட்டது என்றால் 2004ம் ஆண்டு வைக்கப்பட்டது. அந்த ஜன்னல் 2004 ம் ஆண்டு வைக்கப்பட்டது கிடையாது என்றாலும் 4 ஆண்டுகளுக்கு முன்புதான் வைத்தேன் என்றால் சரியல்ல. 2004ம் ஆண்டிலேயே வைத்து விட்டேன். என் வீட்டிற்கு தெற்கு புறத்தில் சின்ன ஜன்னலாக வைத்துள்ளேனா என்றால் இல்லை பெரிய ஜன்னாலாக வைத்துள்ளேன். எனக்கு பூர்வீகம் எந்த ஊர் என்றால் மணப்பாறை பக்கம் வெங்கடாசலபுரம் ஆகும். என்.சுப்பையாபுறம் கிராமத்திற்கு எப்போது வந்தேன் என்றால் 1995ம் ஆண்டு வந்தேன். பிரதிவாதிகளுக்கு என்.சுப்பையாபுறம் கிராமம் பூர்வீகம் என்றால் சரிதான். 12 அடி கிழமேல் அ தபசில் சொத்தையும் அதனுடன் இணைந்த 10.5 சென்ட் நிலத்தையும் பிரதிவாதிகள் சுமார் 100 ஆண்டுகாலமாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அது பொதுப்பாதை ஆகும். அந்த பொதுப்பாதையை தவிர்த்து மீதம் உள்ள இடத்தை 100 ஆண்டுகாலமாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ராஜம்மாளும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் துரைராஜ் நாயக்கரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். துரைராஜ் நாயக்கர் 26.5.2006ம் தேதி அ அயிட்ட சொத்து உட்பட 10.5 சென்ட் நிலத்தை சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.38/2006 படி 1ம் பிரதிவாதி மோகன்ராஜ்க்கு உயில் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் இல்லை. தாவா அ

அயிட்ட சொத்து பொதுப்பாதை என்பதற்கான FMB ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் பெயரில் பத்திரம் ஏற்பட்டுள்ளதாலும் அந்த சொத்தில் பிரதிவாதிகள் தளகற்கள் வைத்து முற்றமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்பதாலும் அந்த சொத்தின் மேலே ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்து பயன்படுத்தி வருவதாலும் அது பிரதிவாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதில் எவ்வித பாத்தியமோ உரிமையோ இல்லை என்றால் சரியல்ல. அதுபொதுப்பாதை ஆகும். நான் கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் அனுபவித்து இடையூறு செய்ய வேண்டும் என்பதற்ாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால்சரியல்ல.